there will be unnecessary misgivings. I hope the Hon. the Leader of the House will take the opportunity to clear away the suspicion so that the people of Tamil Nad and the people of Mabalar may judge the situation properly. I am perfectly certain that if anything has been removed, it is certainly not at the instance of the people of Tamil Nad. The people of Tamil Nad do not want small things or big things to be removed from Malabar or South Kanara district. The action of some misguided men in doing some wrong thing should not be foisted on the people of Tamil Nad. The people of Tamil Nad and Malabar will get on well together as I said in the beginning.

Now, I would like to refer to one or two matters. I should like to suggest to the Hon. the Minister for Law and Finance, who also happens to be the Leader of this House, that there is a kind of parallel functioning of the minds of the Courts in the country and also the Legislature. We find that there is absolutely no connection between the Legislature on the one hand which passes all the laws and the Courts which are supposed to administer and interpret them. There must be some kind of a liaison body which will bring to the notice of the Legislature and the Government any decisions of the High Court or the lower Subordinate Courts where the intention of the Legislature has been miscarried. We pass umpteen legislations here or even in Parliament, but when they go to the Courts, we find that the very purpose of the legislation is defeated. In such cases, immediate rectification by the Legislature will be necessary so that the intention of the Legislature may be carried out.

As an instance in point, I may mention that the Malabar Tenancy Act, which was passed more than a year ago, contained certain seemingly salutary provisions, but when it went to Courts for decision, it was found that most of the beneficial points had vanished, because the Courts interpreted the language in such a way that they took away all the benefits which the Legislature wanted to confer. I would therefore request the Hon. the Minister for Law to consider the suggestion of creating a liaison body which will report to the Legislature and particularly to the Government, as and when decisions are rendered interpreting the legislation passed in this House in such a way that it is discordant with the note struck in the House. The purpose of our legislations should never be miscarried. Some kind of machinery like that should be brought into being so that we may not find ourselves stultified.

We pass various laws here, but ultimately when they go to Court, they are misfired. For that, some kind of effective remedy should be found.

THE HON. SRI C. SUBRAMANIAM : I am really unable to follow the suggestion of the hon. Member. He was referring to legislations passed here and the Courts giving decisions which made the provisions ineffective and in that connection he pleaded for the

11th August 1956] [Sri C. Subramaniam]

setting up of a liaison body. Does he suggest that there should be liaison between the Courts and the Members of this Assembly. Otherwise, I do not see how it can function.

SRI V. R. KRISHNA AYYAR : The concrete suggestion I have is this. Whenever decisions are rendered by Courts, particularly the High Court, such decisions really nullify or render nugatory or futile the effect of the legislation itself. In such cases, this body which I am suggesting could be watchful and could report to the Legislature or draw the attention of the Government and the Members of the Legislature to the fact that a decision has been taken by the High Court which does not appear to fulfil the object of the legislation. I do not exactly mean a kind of liasion established between the Courts and the Legislature as such, but a body which would immediately convey and alert the Legislators of what is taking place in Courts in respect of the various legislations passed here. Hon. Members know that the Legislature wanted to confer the benefit of wiping off all arrears of rent if six months' deposit was made. But the High Court recently interpreted it in such a way that no man in Malabar could actually get the benefit of it. Is it not really frustration of the legislative purpose? The High Court is quite right because it gives grammatical and literal interpretation, but the Legislature is also right in expecting that its intention should be carried out. There must be some machinery which must draw the attention of the Legislature to that circumstance so that we may remedy the defects quickly.

Lastly, I would like to refer to the white collar drudges, namely the N.G.Os. and how we should not forget them. They have been very much in the air now. It is common knowledge that suffering is the badge of that tribe and we should not allow that to continue because they are the backbone of the administrative machinery. All of us know that they are the most underpaid and the most overworked of the species that the State entertains. It is but fair, therefore, that they should have some kind of enthusiasm, some kind of cheer and I should therefore expect the Government to hold out some sop by giving them some increase and thereby keeping them contented. I am not holding out threats nor am I saying that if no increase is given to them, they will go on strike or create things of that sort. They themselves have not said like that, but it is high time that we remembered them. Everybody acknowledges that the N.G.Os. are grossly underpaid and everybody agrees that they are drudges and that their life is one of wretchedness and all that. But then, what is really required is not mere compassion or lip sympathy nor even scaring us away by figures like Rs. 24 lakhs. These are days of expenditure in astronomical proportions and we find that crores and crores of rupees are being spent on various schemes and I suppose that a scheme of asking for half-grant from the Government of India—for which the delegation of the N.G.Os. probably went to Delhi would not be considered improper. The salaries of teachers are to be increased and half-grant has been promised by the Government of India. Similarly, in the case of the

[Sri V. R. Krishna Ayyar] [11th August 1956

N.G.Os. also, the Government of India might give half-grant provided we press hard and make out a strong case. It is a case of conscience, it is a case where the State cannot come to their rescue and it is a case where the underdogs are being low-paid and are suffering so much. I therefore ask for some compassionate treatment and if the finances of the State cannot bear the burden, there is no point in scaring us away with figures. We should ask for Central aid. Central aid will surely come provided we press for it. Knock and the door shall open.

10 58 a.m. DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN: உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னருடைய உரையில் நமக்கு மகிழ்ச்சி தரும் விஷயங்கள் சில இருக்கின்றன. தமிழ் மொழி இனி வருங்காலத்தில் ஆட்சி மொழியாக வரும் என்று நாம் எதிர்பார்த்து இருந்தோம். அதை நம் மனப்படியே அறிவித்ததுபற்றி நமக்கு மிகச் சந்தோஷம்.

அடுத்தபடியாக, வேறு கனரகத் தொழில்கள் குறைந்து நம் நாட்டில் நெய்வேலி எங்கே சரியாக வராமல் இருந்தவிடுமோ என்ற பயம் நம்மில் எல்லோருக்கும் இருந்தது. ஆனால் அந்தப் பயம் இனி வேண்டாம். நெய்வேலித் திட்டம் மிக வெற்றிகரமாக நிறைவேறும் என்று நாம் எதிர்பார்த்ததுபோல் வாக்குறுதி கொடுத்ததிலே நமக்கு எவ்வளவு சந்தோஷம்? இந்தச் செய்தியை நானும் உங்களுடன் பங்குகொண்டு அதற்காக நான் இந்திய சர்க்காருக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை வருகிறது. இதிலே பெருமைப்படுகிறோம்; நமக்குச் சந்தோஷம் உண்டு. நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எல்லோருக்கும் தெரிந்ததுதான். புதிதாக ஒன்றும் இல்லை. தமிழ் நாட்டில் நமக்கு அதிகமான பாசன வசதிகள் இல்லை. இயற்கையாகவே அப்படி இருக்கிறது. ஆகையினால் மற்றப் பெரிய தொழில்கள் எல்லாம் ரொம்பவும் தீவிர ஆலோசனை செய்யப்படுவதால் அதற்குத் திட்டங்கள் நடத்தும் முயற்சியைப் பிறகுதான் முடிக்கவேண்டும். அந்த முறையிலே நாம் பொருளாதார விடுதலைத் துறையில் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்பியிருக்கக்கூடியது சிறு கைத்தொழில்களும், குடிசைத் தொழில்களுந்தான். ஆகவே பெரிய கனரகக் கைத்தொழில்களுக்கும், மற்ற தொழில்களுக்கும் இந்திய சர்க்கார் எவ்வளவு தீவிர கவனம் செலுத்துகிறதோ அதேமாதிரி தீவிர கவனம் செலுத்தவேண்டும். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்தச் சிறு கைத்தொழில், குடிசைக் கைத்தொழில்களுக்கும் மிக அதிகமான பணம், எவ்வளவு அதிகப் பணம் ஒதுக்க முடியுமோ அவ்வளவு அதிகம் ஒதுக்கி அதாவது, பாசன வசதியில்லாத வறண்ட பிரதேசங்களில் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத இடங்களில் செலவிடலாம் என்று நினைக்கிறேன் பாசன வசதி குறைந்த இடங்களில் பரவலாக இந்த கைத்தொழில்கள், சிறு கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்களைப் பெருக்க முன் வரவேண்டும். இதற்குத் தீவிரமாக திட்டமிடப் படவேண்டும். கைத்தொழில் பள்ளிகள் (Industrial Schools, Polytechnics) முதலிய வைகளில் இப்போதிருந்தே மிக வேகமாக நடவடிக்கை எடுத்து திட்டமிட்டால்தான் இந்த 2-வது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நாம் எதிர்பார்க்கக் கூடிய ஒரு பங்காவது நம்முடைய பொருளாதார அபிவிருத்தி நிறைவேற முடியும். ஆகவே இதைத்தான் நான் அதிகமாக வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன முன்னேற்ற விஷயத்தில் நாம் உண்மையிலேயே தீண்டாமையை அகற்றவேண்டுமென்று கருதினோமானால், இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். நான் இரண்டு விஷயங்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒன்று. லேபர் பள்ளிக்கூடங்கள் என்று வைத்திருக்கிறது இந்தக் காலத்துக்கு இனி சரியல்ல. அது ஒரு காலத்தில் அவசியமாக

[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]
11th August 1956]

இருந்தது. இனி நாம் அவர்கள் அதிகமாகப் படிக்கவேண்டும் என்று நினைத்தால் சாதாரணப் பொதுவான பள்ளிகளிலும், மற்றப் பள்ளிகளிலும் ஹரிஜனக் குழந்தைகள் படிக்கும்படி செய்யவேண்டும். அவர்களுக்குப் பகல் உணவு கொடுத்து உதவினால் அதிகமான அளவு ஹரிஜனக் குழந்தைகள் பள்ளிகளுக்கு வருவார்கள். ஹரிஜனப் பள்ளி என்ற பெயர் நல்லதல்ல. எல்லாப் பள்ளிகளிலும் அவர்கள் படிக்க முன் வருவது தீண்டாமையை நன்றாகப் போக்குவதற்கு ஒரு வழியாக இருக்கும்.

அடுத்தபடியாக வீடு கட்டும் திட்டம். இப்போது பல இடங்களில் இந்த வீடு கட்டும் திட்டம் அமுலுக்கு வருகின்றன. நான் ஒன்று சொல்லக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் ஹரிஜனங்களுக்கு சர்க்கார் ஏற்கெனவே கொடுத்திருக்கிற இடத்தைப் பிடுங்குகிற முறையல் சொல்லவில்லை. ஹரிஜனங்களுக்கு நாம் இடங்கள் ஆர்ஜிதம் செய்திருக்கிறோம். அந்த ஹரிஜனங்களுக்கு என்று வீடுகள் கட்டிக்கொடுப்பதானது சேரிகளைத்தானே encourage செய்கிறோம் என்கிற பயம் நம் மனதில் இருக்கிறது. அங்குள்ள ஹரிஜனச் சேரிகள் 50 வீடுகளை எடுத்தால் 10, 8, 4, 5 வீடுகள் ஹரிஜனங்கள் அல்லாதவருக்கும், ஜாதி ஹிந்து என்றுகூட இல்லை. ஹரிஜன அல்லாதவருக்கு நடுநடுவே, முக்கியமாக ஆசிரியர்களுக்கு வீடு கட்டித் தரவேண்டும் இலவசமாக. அவர்களுக்கும் நாம் கடன் கொடுக்கவேண்டும். சேரி ஒழிப்பு, ஹரிஜன சேரிகள் ஒழிக்கப்படுவதற்கு இந்தத் திட்டம் மிக மிக ஆதரவாய் இருக்கும். நம்மில் இந்த ஹரிஜன சேரி ஒழிப்பில் ஆர்வம்கொண்ட அதிகம்பேர் அந்த இடத்தில் குடியிருக்க வருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இதை சர்க்கார் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டும். இப்போது இயந்திரத் தொழில்கள் என்று பல கோடி ரூபாய்கள், பல லட்சம் ரூபாய்களில் பல இடங்களில் திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்றன. கிராமங்களில் யாரும் போய் குடியிருக்க விரும்பாத காரணம் அடிப்படை இல்லாத காரணம்தான். ஜில்லா போர்டு தனி மானேஜ்மெண்டு நிர்வாகத்தின் கீழ் கிராமங்களில் பள்ளிகள் நடத்துகின்றார்கள். அதில் எல்லோருக்கும் ஒரளவு மானியம், 25 சத விகித மானியம் என்று கொடுக்கலாம். 75 சத விகிதம் குறைந்த வட்டியிலோ, வட்டியில்லாமலோ கடன் கொடுக்கலாம். பத்தாயிரக் கணக்கான ஏழைகளுக்கு நாம் ஒரு வீடுகட்டும் திட்டம் ஏற்பாடு செய்வோமேயானால், அந்தப் பள்ளிகள் வேலை செய்வதன்மூலம் கல்வித் தரம்கூட உயரும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இந்த வீடு கட்டும் திட்டம், இதை ஒரு முக்கிய அம்சமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI K. R. NALLASIVAM : உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையில் கைத்தறி நெசவாளர்கள்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. விசைத் தறிகள் புகுத்துவதுபற்றி இந்திய சர்க்கார் ஒரு முடிவு செய்திருக்கிறது. அந்த முடிவின் காரணமாக கைத்தறி நெசவாளர்களுக்கு ஆபத்து கொண்டுவரப்படுகிறதென்பதை சர்க்கார் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை, ஒரு பக்கம் குடிசைத் தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டே விசைத்தறியும் புகுத்தப்படுகின்றது. ஒன்றுக்கொன்று முரணான காரியத்தைச் சர்க்கார் செய்கிறது. இது கைத்தறியாளர்களுக்கு ஆபத்தானது, 11-05 a.m.

அடுத்தபடியாக விலைவாசி உயர்வைத் தடுக்க என்று அதற்காக நியாய விலைக் கடைகளை அநேகமாக நகர்ப்புறங்களில்தான் ஆரம்பிக்கின்றனர். நகரங்களில் இருக்கிற நியாயவிலைக் கடைகளிலும் ஜனங்களுக்குத் தேவையான அளவுக்கு தானியங்கள் வழங்குவது கிடையாது. ஆகவே தேவையான தானியங்களை நியாய விலைக்கு ஜனங்களுக்குக் கிடைப்பதற்கு ஆன நடவடிக்கைகளை ஒழுங்காகச் செய்யவேண்டும். கிராமங்களிலும் பூராவும் தானியங்கள் அதிகப்படியாகக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக என்னுடைய பிரதேச விஷயங்களைப்பற்றி பலர் சட்டசபையில் பேசினார்கள். கீழ்பவானியில் பாசனத்தில் உள்ள நிலங்களைப்பற்றி நிலைமையை எடுத்து நேற்று ஸ்ரீ வி. கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். நான் ஒரு விஷயத்தைப்பற்றிச்

[Sri K. R. Nallasivam] [11th August 1956

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சத்தியமங்கலத்தில் மகாநாடு கூட்டி மூவர் விண்ணப்பம் கொடுத்தனர். அதுபற்றி சர்க்கார் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. அதைப் பொறுத்தவரையிலும், இன்றுவரையில் அது சம்பந்தப்பட்ட இலாகா எவ்விதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. வருகிற செப்டம்பர் மாதத்தில் தண்ணீர் விடப்போகிறார்கள். இபபோது நான் சொல்வது சர்க்கார் அதற்கும் திருந்திக்கொள்ளும் வகையில் முடிவு செய்வார்களானால் சரியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சனையில் ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள் கிளர்ச்சியை உண்டு பண்ணுவதற்காகச் சொல்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே சர்க்கார் கவனம் செலுத்தவில்லை என்பதற்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ பி. எஸ். ரங்சாமி நாயுடு போன்றவர்கள்கூட இதை வற்புறுத்திப் பேசினாலுங்கூட, எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படுவது கிடையாது. அப்படியிருக்கும் போது எதிர்க் கட்சி ஏதோ காங்கிரஸ் கட்சி பேரில் குறைகூற வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று நினைப்பதில் எந்தவிதமான அர்த்தமும் இருக்கமுடியாது. இங்கு சட்டம் உண்மையிலேயே கால்களின்கீழ் போட்டு தேய்க்கப்படுகிறது. ஜமாபந்திமிலே விண்ணப்பங்கள் கொடுத்தால், உடனடியாகப் பரிசீலனை செய்து அன்று மாலைக்குள்ளாகவே அதற்குத்தக்க நிவாரணம் செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பதில் தெரிவிக்கவேண்டும். அம்மாதிரி பதில் தெரிவிப்பதே கிடையாது. ஆயிரத்திற்கு பத்து, அல்லது ஐந்து விண்ணப்பங்களுக்குதான் மாலைக்குள் பதில் கிடைக்கிறது. பாக்கி 990, 995 விண்ணப்பங்களைக் கவனிக்காமல் கட்டி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதுமாத்திரம் அல்ல. வரி வசூல் முறையைப்பற்றி ஸ்ரீ வி. கே. பழனிசாமி கவுண்டர் போன்றவர்கள் இங்கு அனுபவித்து நிலைமையை நேரில் பரிசீலனை செய்தால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். எப்படியாவது பணம் வசூலிக்கப்படவேண்டுமென்பதுதான் அதிகாரிகளின் குறிக்கோளாக இருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு அரசியல் கொள்கை உண்டு. அதை ஜனங்களிடத்தில் வெளியிடுவதற்கும் உரிமை உண்டு. இங்கு தவறாகச் சொல்லித்தான் ஜனங்களைக் கவரவேண்டுமென்பதில்லை. அங்கிருக்கும் விவசாயிகள் கிளர்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். சர்க்காருக்கு எதிராக என்றைக்காவது ஒரு நாள் அவர்கள் எழுவார்கள் என்பதை அரசாங்கத்தார் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். சமீபத்தில் விவசாயிகள் தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் அநுபவசியமான தீர்வையை எதிர்த்து 'ஸ்டே' வேண்டுமென்று தாலூகா காரியாலயத்தில் கேட்டுக்கொண்டால் 'ஸ்டே' தேவையான அளவு கிடைக்கவில்லை. ஜில்லா கலெக்டர் காரியாலயத்திற்குச் சென்று கேட்டால் 100 விண்ணப்பங்களுக்கு பத்துக்கு 'ஸ்டே' கிடைக்கிறது. 90 விண்ணப்பங்கள் குப்பைக் கூடையில் போடப்படுகின்றன. தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் எப்படியாவது வரி வசூல் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். சுமார் 15 லட்சம் ரூபாய் வரை கோபி தாலூகாவிலிருந்து வசூல் செய்யப்பட்டதாகக் கூறினார்கள். ஈரோடு தாலூகாவைப்பற்றி தெரியவில்லை. கூடிய விரைவில் விவரம் தெரியுமென்று நினைக்கிறேன். சமீபத்தில் ஸ்ரீ கக்கன் அந்தப் பகுதிக்கு வருவதாக பத்திரிகையில் செய்தி வந்தது. சும்மா வருவதால் ஒன்றும் விவசாயிகள் எமாற மாட்டார்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஜனங்களிடத்திலே காரியங்களைச் செய்துவிட்டு ஊருக்கு வந்தால் ஜனங்கள் காது கொடுத்தாவது கேட்பார்கள். ஒரு காரியமும் செய்யாமல் மகாநாடு போடுவது, ஊர்வலம் வருவது என்று இருந்தால் நிச்சயமாக எதிர் காலத்தில் மாபெரும் ஆபத்தில் கொண்டுவிடும் என்று சொல்லிக்கொண்டு, உடனடியாக சர்க்கார் அதற்கான நிவாரண நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

11-10 a.m. * **Sri A. DORAISAMI GOUNDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே கவர்னர் உரையிலே சேலம் ஜில்லாவிலே அலுமினியம் தொழிற்சாலை ஏற்படுத்தப் போவதாக சொல்லியிருக்கிறார். அதை சந்தோஷமாக,

11th August 1956] [Sri A. Doraisamy Gounder]

வரவேற்கிறேன். ஆனால், சேலம் ஜில்லாவிலே சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய வசதி இருந்தும் அங்கே அம்மாதிரி சிமெண்ட் தொழற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்று நான் பலமுறை கோரியும் அதைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தியதாகத் தெரிய வில்லை. இதை அரசாங்கம் அவசியம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

ஹரூர் தாலூகாவில் வாணியாறு திட்டத்திற்கு எஸ்டிமேட் தயார் செய்திருந்தும், அது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வில்லையோ என்ற சந்தேகம் இருக்கிறது. அதையும் அவசியம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

ஊத்தங்கரை சப்-தாலூகாவிலே பாம்பாறு திட்டத்திற்கும் எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டிருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டிருந்தும் இதுவரை யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்பட வில்லை. அதையும் இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் திலாவது சேர்ப்பதற்கு அவசியம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டு மென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு போதுமான தண்ணீர், நீர்ப்பாசன வசதி ஹரூர் தாலூகாவிலும், ஊத்தங்கரை சப-தாலூகாவிலும், கிருஷ்ணகிரி தாலூகாவிலும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதேமாதிரி தண்ணீர் சௌகரியம் அங்கு ஏற்படுத்தாவிட்டால் அங்கு கொடிய பஞ்சம் ஏற்பட்டு ஜனங்கள் ஏராளமான பேர்கள் உயிரிழக்கும்படி ஏற்படும் என்று அரசாங்கத்தாருக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஆகையால், அங்கு சிறு தொழிற்சாலைகள் ஏற்படுத்தவேண்டும். சிமெண்டு உற்பத்தி தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும். ஜனங்களுக்குப் போதுமான வசதிகள் செய்துகொடுக்கவேண்டும். விவசாயிகளுக்குப் போதுமான ஒத்தாசை செய்து, நீர்ப்பாசன வசதி செய்துகொடுத்தால்தான் அங்கு ஜனங்கள் வாழமுடியும்.

அதோடுகூட, முதல் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் எங்கள் பகுதியில் அபிவிருத்தித் திட்டத்திற்கு ஒரு பிளாக்குகூட எடுத்துக்கொள்ளப்படவில்லை. இரண்டாவது திட்டத்தில் ஏற்படுத்த இருக்கும் 23 புதிய அபிவிருத்தி பிளாக்குகளில் ஹரூர் தாலூகாவிலும், மற்றொன்று ஊத்தங்கரை சப-தாலூகாவிலும் கேட்டும் ஒன்றும் எடுத்துக்கொள்ளப்பட்டதாகத் தெரிய வில்லை. அங்கு அபிவிருத்தித் திட்டத்தை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இவை யாவும் மந்திரி அவர்கள் கவனித்து உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***Sri M. KATTIMUTHU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையை மனப்பூர்வமாக ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நேற்று நிதி மந்திரி அவர்கள் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, என்.ஜி.ஓ.-க்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டு மென்றால் எந்த வகையில் வரி போட்டு சரிப்படுத்துவது என்பதற்கு அங்கத்தினர்கள் யோசனை சொல்லவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதற்கு என்னுடைய யோசனை என்னவென்றால், ரூபாய் இருபத் தைந்துக்குமேல் சர்க்காருக்கு கிஸ்தி செலுத்துபவர்களுக்கு வரி போடலாம். ஐந்து ஏக்கராக்களுக்குமேல் நிலம் வைத்திருப்பவர்களுக்கு வரி போடலாம்.

இன்னொரு யோசனையும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத் திலிருந்து மத்திய அரசாங்கத்திற்கு ரயில்வே இலாகா மூலமும், தபால் தந்தி இலாகா மூலமும், வருமான வரி இலாகா மூலமும் சேரும் வரித் தொகையிலிருந்து நம்முடைய ராஜ்ய என்.ஜி.ஓ.-க்களின் உதவிக்காக ஒரு பங்குத் தொகையை ஒதுக்கும்படி மத்திய சர்க்காரை நமது சர்க்கார் கேட்கலாம். ஏனென்றால், ஒரு இடத்தில் ரயிலுக்கு, ஏதாவது கோளாறு விபத்தோ ஏற்பட்டு ரயில் நின்று விட்டால், நடுக்காட்டிலானாலும், அந்த

[Sri M. Kattimuthu] [11th August 1956

ரயில் வண்டியையும், அதிலுள்ள உடைமைகளையும் கலெக்டர் முதல் தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர், தோட்டி, தலையாரி வரையில் காவல் காத்துகொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு சகல பொறுப்பும் இருக்கிறது. அதன்பிறகுதான் ரயில்வே அதிகாரிகள் ஸ்தலத்திற்கு வருகிறார்கள். அபபொழுதுதான் அங்குள்ள ரெவினியூ சிப்பந்திகள் ரயில்வே அதிகாரிகளிடம் ரயிலை ஒப்படைக்கிறார்கள். இவ்வளவு பொறுப்பு வாய்ந்த ரெவினியூ இலாகா அதிகாரிகளுக்கு ரயில்வே வருமானத்திலிருந்து குறைந்தபட்சம் இருபது சதவிகிதமாவது 'கிராண்டு' நமது சர்க்கார் வாங்கிகொள்ளலாமென்று நான் யோசனைகூற விரும்புகிறேன்.

இதேபோல, தபால் தந்தி இலாகாவை எடுத்துக்கொண்டால், தபால் பில்லைகளையெல்லாம் கலெக்டர் ஆபீஸ் கஜானாவில்தான் பொறுப்பாக வைக்கப்படுகின்றன. அவர்கள் காபந்து செய்து வைத்துக்கொண்டிருந்தால், தபால் இலாகாவினர் அதை எடுத்துக்கொண்டுபோய் விற்பனை செய்து அதிலிருந்து வருமானம் அடைகிறார்கள். அதையும் மத்திய சர்க்கார்தான் கொண்டு போகிறார்கள். அவ்வளவு பொறுப்போடு காவல் காத்துக் கொண்டிருக்கும் ரெவினியூ இலாகாவினருக்காக தபால் தந்தி இலாகா வருமானத்திலிருந்து இருபது சதவிகிதமாவது நமது சர்க்கார் கேட்டு வாங்கி என்.ஜி.ஓ.-க்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழி செய்யலாம்.

மூன்றாவதாக, மத்திய அரசாங்கத்தாரால் வசூலிக்க முடியாத வருமான வரியானது ஜில்லா கலெக்டருக்கு அறிவிக்கப்பட்டு, கலெக்டர் பொறுப் பெடுத்து, நபருக்கு சம்மன் கொடுத்து, அவனுடைய ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை ஏலம் போட்டு, பணத்தை வசூல் செய்து மத்திய அரசாங்கத் திற்கு செலுத்தவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் ரெவினியூ இலாகா அதிகாரிகள்தான் செய்யவேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்காக இவ்வளவு கஷ்டப்படுகிற ராஜ்ய என்.ஜி.ஓ-க்களுக்காக வருமான வரி இலாகாவிலிருந்து இருபது சதவிகிதமாவது நமது சர்க்கார் கேட்டு வாங்கி நம்முடைய மாகாண என்.ஜி.ஓ-க்களுக்கு கொடுக்கவேண்டுமென்று நான் சர்க்காருக்கு யோசனை தெரிவிக்க விரும்புகிறேன்.

ஜில்லா போர்டிலே இருக்கக்கூடிய சர்க்கார் குமாஸ்தாக்களுக்கும், ராஜ்ய சர்க்கார் குமாஸ்தாக்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும். இரண்டுபேர்களுக்கும் சம்பள விகிதம் ஒரே விதமாகத்தான் இருக்கவேண்டும். தென்னாற்காடு ஜில்லா போர்டு இது விஷயமாக அரசாங்கத்தாருக்கு விண்ணப்பம் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை கவர்னமெண்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஜில்லா போர்டு சிப்பந்திகளுக்கும், ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஒரேமாதிரி சம்பள விகிதம்தான் இருக்கவேண்டும்.

சென்ற மாதத்திலே ரயில்வேயில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் ஐந்து ரூபாய் உயர்வு அளிக்கப்பட்டது. ஏற்கெனவே சம்பள விகிதம் போதவில்லை என்று கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கும் சென்னை சர்க்கார் என்.ஜி.ஓ-க்களுக்கு அது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, என்.ஜி.ஓ-க்களுக்கு சம்பளத்தை உயர்த்திக்கொடுக்கக்கூடிய விஷயத்தில் சர்க்கார் கண்ணுங்கருத்துமாக இருந்து அவர்களுக்கு சம்ப ளத்தை உயர்த்திக் கொடுக்க வழியை வகை காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களைப்போன்ற எம்.எல்.ஏ-க்களின் சம்பளத்திலுருந் தாவது 20 சதவீதத்தை எடுத்து என்.ஜி.ஓ-க்களுக்குக் கொடுத்தால் ரொம்ப திருப்தியாக இருக்கும். ஏனென்றால், அவர்களால்தான் அரசாங்கமே நடக்கிறது. அவர்கள்தான் அரசாங்கமாகிற வண்டிச் சக்கரத்திற்கு அச்சாணி போன்றவர்கள். எதிர்காலத்தில் நம்முடைய கட்சியைப் பலப்படுத்தி நடத்தக்கூடிய திறமை அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்கு உற்சாகம் இருந்தால் நாம் அரசாங்கத்தை நல்ல முறையில் நடத்திப்போக ஏதுவாக இருக்கும். அவர்கள் மனது புண்படாமல் இருக்கும் அளவுக்கு அவர்களுடைய சம்பளத்தையும் அலவன்ஸையும் உயர்த்திக்கொடுக்க

11th August 1956] [Sri M. Kattimuthu]

വേണ്ടുമെന്നു കേട്ടുകൊള്ളുന്നേൻ. അല്ലെങ്കിൽ അലവൻസെയാവതു സംബളത്തോടു ചേർത്തുകൊടുക്കുക സർക്കാർ മുൻ വരവേണ്ടുമെന്നു കേട്ടുകൊള്ളുന്നേൻ.

നെയ്‌വേലി പഴുപ്പു നിലക്കുന്നിട്ടത്തെപ്പറ്റി ഗവർണ്ണർ തമ്പുടെയ്യ ഉരെയിൽ ചൊല്ലുന്നപോതു നെയ്‌വേലി ഒരു പെരിയ തൊഴിൽശാലയാക മാറി എല്ലാവിതമാൻ നൻമൈയും കിടൈക്കും എൻറും, അതനാൽ ജനങ്കളുക്കു നലൈ പലൻകൾ കിടൈക്കും എൻറും തെരിവിത്തിരുക്കിറാർ. മറ്റവർകൾ അങ്കേ പോയ്പ് പാർത്തുച് ചൊന്നാർകളോ അല്ലതു പത്തിരികൈ മൂലമാകപ് പാർത്തതൈത്താൻ ചൊല്ലുന്നാർകളോ എനക്കുത് തെരിയവില്ലൈ. ആനാൽ, നാൻ ഒവ്വൊരുവാരമും തവറാമൽ നെയ്‌വേലിത് തൊഴിൽശാലൈയിൽ വേലൈ ചെയ്കിൻറവർകളുക്കുത് തെരിയാമൽ അങ്കു പോയ്‌വരുകിറേൻ. അങ്കു നടക്കക്കൂടിയതൈപ്പറ്റി നാൻ നേരിൽ അറിന്തിരുക്കിറേൻ. ഒൻപതു വറുഷ കാലമാക ഇതുവരൈ അങ്കു എവ്വളവു കാരിയങ്കൾ ചെയ്തിരുക്കിറാർകൾ. വെളി നാടുകളിലിരുന്തു വരവഴൈക്കപ്പട്ട പിരമാതമാൻ ഇൻജിൻകൾ അങ്കേ ഇറക്കപ്പടുകിൻറന. ആനാൽ അങ്കുള്ളവർകളുക്കു വേലൈയിൽ കുരുത്തു ഇരുപ്പതാക എനക്കുത് തെരിയവില്ലൈ. ആകൈയാൽ മന്ത്രി അവർകൾ ഇതു സംപന്ധമാക ഉടിക്കടി അങ്കു പോയ് വേലൈയൈത് തുരിതപ്പടുത്തി, ചീക്കിരത്തിൽ ഇട്ടങ്കൾ നിറവേറുവതുക്കുത് തകുന്ത നടവടിക്കൈ എടുക്ക വേണ്ടുമെന്നു കേട്ടുകൊള്ളുന്നേൻ.

ഹരിജനങ്കൾ വിഷയത്തിലേ തരിശു നിലം അടമാനം ചെയ്തൽ മനൈ കൊടുത്തൽ തുരിതമാക്ക വേണ്ടും. (നേരം മുടിന്തുവിട്ടതു എൻപതുക്കു ഉതവി ചപാനായകർ മണിയൈ അടിത്താർ.)

* SRI C. H. KANARAN : മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, മലബാറിലെ ഭക്ഷ്യസ്ഥിതിയെ സംബന്ധിച്ചു ഗവർണ്ണരിന്നു ഒരു മെമ്മോറാണ്ടം കൊടുത്തിട്ടുണ്ട്. ഗവർണ്ണരുടെ പ്രസംഗം കേട്ടാൽ തോന്നുക ഈ ഭക്ഷ്യപ്രശ്നം ചില പട്ടണങ്ങളെമാത്രമേ ബാധിച്ചിട്ടുള്ളുവെന്നാണ്. ഗ്രാമങ്ങൾക്കായ ഉദ്യോഗസ്ഥന്മാർ മാത്രമേ വിഷമമുള്ളു എന്നാണ് ഗവർണ്ണരുടെ റിപ്പോർട്ടിലുള്ളത്. ധാരാളം നെല്ലുല്പാദിപ്പിക്കുന്ന തലയാവൂർ മുതലായ സ്ഥലങ്ങളിൽപ്പോലും ഇതു ഇന്നൊരു വലിയ പ്രശ്നമായിത്തീർന്നിട്ടുള്ളപ്പോൾ പണ്ടു ഒരു കമ്മിപ്രദേശമായ മലബാറിലെ സ്ഥിതി എന്തായിരിക്കുമെന്നു ഊഹിക്കുവാൻ കഴിയും. അങ്ങനെയുള്ള ഒരു പ്രദേശം ഓരോ വില്ലേജിലും സ്വയപര്യാപ്തകൾ തുറക്കണമെന്നു നിവേദനം നടത്തിയിട്ടു അതു പ്രായോഗികമല്ലെന്നാണ് ഗവർമ്മേണ്ടിന്റെ നിലപാട്. എന്തുകൊണ്ടു പ്രായോഗികമല്ലെന്നു ഗവർമ്മേണ്ട് പറയേണ്ടതാണ്. അതു ആലോചിച്ചതായോ കാരണം, വിശദീകരിച്ചതായോ അറിഞ്ഞിട്ടുള്ളതായോ കാരണം എന്ന് അറിയുന്നില്ലെന്നു. വിതരണം ചെയ്യാനാണെങ്കിൽ കോ-ഓപ്പറേറ്റീവ് സൊസൈറ്റികൾ അതിന്നു സന്നദ്ധമാണ്. സൊസൈറ്റികൾ വിതരണം ചെയ്യുന്നതിന്നു നിയന്ത്രണങ്ങളുണ്ടെങ്കിൽ അതു മാററാൻ സാധിക്കും. കോ-ഓപ്പറേറ്റീവ് സൊസൈറ്റികളില്ലാത്ത ദിക്കുകളിൽ വിതരണം സംഘടിപ്പിക്കുവാൻ ജനങ്ങൾ തയ്യാറാണ്. അടിയന്തരമായി, വിശേഷിച്ചും ഈ ഓണക്കാലത്തു ഭക്ഷ്യധാന്യങ്ങൾ സൌകര്യമായി കിട്ടേണ്ടിയിരിക്കുന്ന ഘട്ടത്തിൽ, നാട്ടിന്റെ നന്മാഭാഗത്തും ന്യായവിലക്കടകൾ ഉറന്ന ക്ഷാമകാലത്തിലുണ്ടായിട്ടുള്ള ബുദ്ധിമുട്ട് പരിഹരിക്കണമെന്നു അവേക്ഷിക്കുന്നു. അതുകൂടാതെ തോട്ടങ്ങളിലു ഫാക്ടറികളിലും തൊഴിലാളികൾക്കു ഗുട്ടുകൂടുന്ന മററു സ്ഥലങ്ങളിലും ന്യായവിലക്കടകൾ ആരംഭിക്കുപോലെ അരിവിതരണം ചെയ്യുന്നതിന്നും അടിയന്തരമായി ഏർപ്പാടുചെയ്യേണ്ടതാണ്.

മലബാറിനെ സംബന്ധിച്ചിടത്തോളം വളരെ മുഖ്യമായിട്ടുള്ള ഒരു പ്രശ്നമാണ് മലബാർ കുടിയാന്മാരുടെ നിയന്ത്രണത്തിന്റെ പ്രശ്നം. അതിനെക്കുറിച്ചു ശ്രീ വി. ആർ. കൃഷ്ണയ്യർ ഇവിടെ സംസാരിക്കുകയുണ്ടായി. കോടതികളുടെ തീർപ്പിന്റെ ഫലമായി നിയമത്തിന്റെ ഉദ്ദേശം തന്നെ ഇന്നു പരാജയപ്പെട്ടിരിക്കുകയാണ്. പാട്ടക്കോടതികൾ കൊണ്ടു കുടിക്കാൻ യാതൊരു ഗുണവുമില്ല. ഒന്നാമത്തെ വിളയുടെ പാതി മാത്രമേ കണക്കാക്കാവൂ എന്നുള്ളതു ഇന്നു പോയിരിക്കുകയാണ് കൊയ്ത്തുകൂലി വകയെടുക്കേണ്ടതില്ലെന്നും തീർപ്പുമാനം ഉണ്ടായിട്ടുണ്ട്. കരുവാടിക്കു ഒടുക്കിക്കൊണ്ടു മററപ്പുലം മുത

[Sri C. H. Kanaran] [11th August 1956

ലായ പാടുകോടതികളിൽ വിധിയുണ്ടായിരിക്കുന്നു. നിയമംകൊണ്ടുദ്ദേശിച്ചതിന്നുനേരേ വിപരീതമായ അനുഭവമാണ് ഇന്നു കൃഷിക്കാർക്കു ഉണ്ടായിക്കൊണ്ടിരിക്കുന്നതു്. ഇതിന്നു ഒരു പോംവഴിയുണ്ടാക്കേണ്ടതു് അടിയന്തിരമായ ആവശ്യമാണ്.

വളരെ പ്രാധാന്യമുള്ള മറ്റൊരു പ്രശ്നമാണ് വില്ലേജ് ഉദ്യോഗസ്ഥന്മാരുടേയും എൻ. ജി. ഒ. മാരുടേയും പ്രശ്നം. ഈ പ്രശ്നത്തെ ഗൌരവപൂർവ്വം നേരിടാതിരിക്കുന്നതു് ശരിയായ ഒരു നയമല്ല. വില്ലേജ് ഉദ്യോഗസ്ഥന്മാരുടെ കാര്യം ഭോചനയിലാണെന്നു വളരെക്കാലമായി പറഞ്ഞുവരുന്നുണ്ടെങ്കിലുതെ എന്താണ് ആലോചനയിലുള്ളതു്, എന്തുചെയ്യാനുദ്ദേശിക്കുന്നു, അതു് എന്നു ചെയ്യും എന്നൊന്നും ഇതുവരെ പറഞ്ഞിട്ടില്ല.

അടുത്ത കാലത്തു പടിഞ്ഞാറൻതീരത്തു വെള്ളപ്പൊക്കംമൂലമുണ്ടായ കെടുതികൾ ഗവമേണ്ടിന്റെ ശ്രദ്ധയെ ഭവണുവോളം ആകർഷിച്ചു മട്ടു കാണുന്നില്ല. വടക്കെ മലബാറിൽ ഭയങ്കരമായ നാശനഷ്ടങ്ങളാണ് വെള്ളപ്പൊക്കംമൂലമുണ്ടായിട്ടുള്ളതു്. ആയിരക്കണക്കിന്നു വീടുകൾ നശിച്ചുപോയിട്ടുണ്ട്. അങ്ങിനെ ദുരിതമനുഭവിക്കുന്ന ജനങ്ങൾക്കു സഹായം നൽകാൻ ഗവമേണ്ടു ഇനിയെങ്കിലും മുന്നോട്ടുവരണമെന്നു അപേക്ഷിക്കുന്നു.

മലബാറിന്റെ കിഴക്കൻ പ്രദേശങ്ങളിലെ ജനങ്ങളുടെ, പ്രത്യേകിച്ചും ആദിവാസികളുടെ അഭിവൃദ്ധിക്കായി ഒരു പദ്ധതി രൂപീകരിച്ചു നടപ്പിൽ വരുത്തേണ്ടതു് അത്യാവശ്യമാണ്. അട്ടപ്പാടിയിലും മററും വസിക്കുന്ന ആദിമനിവാസികളെ മനക്ഷത്രായിട്ടു പോലും കണക്കാക്കിയിട്ടുള്ള ലക്ഷണമില്ല. അവരെ ഉയർത്തിക്കൊണ്ടുവരുന്നതിന്നു എത്രയോ വക്കം ഉദ്ദേശിക്കു ചെലവുചെയ്യേണ്ടിവരും. ജന്മിമാരും പോലീസുകാരുംകൂടി കൂട്ടുചേർന്നുകൊണ്ട് ആദ്യവാസികളെ ഒഴിപ്പിച്ചു അട്ടിയോടുക്കുന്ന ഒരു സമ്പ്രദായമാണ് ഇന്നു നിലവിലുള്ളതു്. സമുദായത്തിന്റെ ഏററവും അടിത്തട്ടിൽ കിടക്കുന്ന ഈ ജനവിഭാഗത്തെ രക്ഷിക്കാൻ ഈ ഗവമേണ്ടിന്നു പദ്ധതിയൊന്നുമില്ലേയെന്നു ഞാൻ ചോദിക്കുന്നു. അതിനെപ്പററി ഗവണ്മെന്റുടെ പ്രസംഗത്തിൽ യാതൊന്നും പ്രസ്താവിച്ചു കാണുന്നില്ല. അവർക്കു രക്ഷ നൽകുന്നതിന്നുവേണ്ടി അടിയന്തിരമായി ഒരു പദ്ധതി ആരംഭിക്കണമെന്നു ഞാൻ ആവശ്യപ്പെടുന്നു.

സർ, ബീഡിവ്യവസായത്തെ സംബന്ധിച്ചു ഗവമേണ്ടു ഒരന്വേഷണമെങ്കിലും നടത്തിയിട്ടുണ്ട്. അന്വേഷണത്തിന്റെ ഫലമെന്തായി, റിപ്പോർട്ടെവിടെ എന്നൊന്നും യാതൊന്നറിവുമില്ല. ബീഡിത്തൊഴിലാളികളെ രക്ഷിക്കുന്നതിന്നും ബീഡിവ്യവസായത്തെ അഭിവൃദ്ധിപ്പെടുത്തുന്നതിന്നും ഒരു നിയമം കൊണ്ടുവരാനുദ്ദേശിക്കുന്നുണ്ടോ, ഉണ്ടെങ്കിൽ എന്നു കൊണ്ടുവരും എന്നുള്ളതിനെ സംബന്ധിച്ചും ഗവണ്മെന്റുടെ പ്രസംഗത്തിൽ യാതൊരു സൂചനയുമില്ല.

മലബാറിൽനിന്നും വിദ്യാർത്ഥികൾ അടുത്തിരിക്കുന്ന മട്ടത്തിൽ പല സാധനങ്ങളും തമിഴ്നാട്ടിലേക്കു കടത്തിക്കൊണ്ടുപോകുന്നുവെന്ന് വലിയ ആക്ഷേപമുണ്ടായിട്ടുണ്ട്. അതിനെപ്പററി ഇവിടെ പലരും പറഞ്ഞുകഴിഞ്ഞിട്ടുള്ളതുകൊണ്ട് ഞാൻ കൂടുതൽ പറയണമെന്നുദ്ദേശിക്കുന്നില്ല. തമിഴ്നാട്ടിലേയും മലബാറിലേയും ജനങ്ങൾ എക്കാലവും സൌഹാർദ്ദത്തോടും ഐക്യത്തോടും കഴിഞ്ഞുകൂടണമെന്നു ആഗ്രഹമുള്ളവരാണ്. ചില ഉദ്യോഗസ്ഥന്മാരുടെ ആലോചനക്രമത്തെയുള്ള നടപടികളായിരിക്കാം ഈ ആക്ഷേപങ്ങൾക്കെല്ലാം കാരണമാക്കിയിട്ടുള്ളതു്. ഏതായാലും ഈ തെററിദ്ധാരണകളും അസുഖകരമായ അന്തരീക്ഷവും ഒഴിവാക്കുന്നതിന്നു സ്വഭാവങ്ങളുടെ യഥാർത്ഥ്യത്തെപ്പററി ഒരന്വേഷണം നടത്തി വിവരം ജനങ്ങളെ അറിയിക്കേണ്ട ചുമതല ഗവമേണ്ടിനുണ്ട്. അതിന്നു ഇരുഭാഗത്തേയും എം. എൽ. എ. മാരടങ്ങിയ ഒരു കമ്മിറ്റി രൂപീകരിച്ചു അന്വേഷണം നടത്തണമെന്നു ഒരു നിർദ്ദേശം ഉണ്ടായിട്ടുണ്ട്. അങ്ങനെ ഒരന്വേഷണം നടത്താനുള്ള ചുമതല ഗവമേണ്ടു എടുക്കണമെന്നാണ് എനിക്കു പറയാനുള്ളതു്. പല മട്ടിലുള്ള ആക്ഷേപങ്ങളുണ്ടാകുകയും ജനങ്ങൾ ഇരിക്കെയെല്ലാം ആശങ്കയോടെ വീക്കിക്കകയും ഇരിക്കുമ്പോൾ കുറെ പരമാർത്ഥമുണ്ടെന്നു ഉത്തരവാദിത്വമുള്ള ആളുകളും പത്രങ്ങളും പ്രസ്താവനകളിക്കുകയും ചെയ്യുമ്പോൾ ഇതിലും കുള്ളമാണ്, അതിന്നു യാതൊരടിസ്ഥാനവുമില്ല എന്നു മന്ത്രിമാർ പറഞ്ഞതുകൊണ്ടു മാത്രമായില്ല. ഇരുന്നും ഒരു സമാധാനമല്ല. ഇത്രയ്ക്കു പരസ്യമാനെന്നും സംഭവിച്ചിട്ടില്ല, സാധാരണ മട്ടിലുള്ള ചില കാര്യങ്ങൾ നടന്നിട്ടുണ്ടായിരിക്കാം, അതിനെ അതിശയോക്തികൊണ്ടു പെരുപ്പിച്ചുകാണിക്കുകയാണ് ചിലർ ചെയ്യിട്ടുള്ളതെന്നെല്ലാം ഇവിടെ ഒരു ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ പറഞ്ഞു

11th August 1956] [Sri C. H. Kanaran]

கேடு. ஶரியாயிரிக்கும். எங்கிலும் ஶரனேபக்ஷணம் நடத்தியிடுவேணம் அது நிரமாநிக்கான். அது கூவாண், அடிஸ்ஸாநமிஷ்ஷாத்தாண் எண்ணும் ஶரெங்கிலும் அபிப்ராயப்பெடுதுகொண்டு மறுக காஷ்ம் அவஸாநிக்கயிலெந்ணாண் எனிக்க உரிஞ்ஞு பறயுவாஞுள்ளது.

* SRI R. S. ARUMUGAM : கனம் உப தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பேருரையிலே திருவாங்கூர்-கொச்சி தமிழ்ப்பகுதி சென்னையில் சேர இருக்கிறது என்றும், தமிழ் மொழி ஆட்சி மொழியாக வரப்போகிறது என்றும் கூறப்பட்டிருப்பதுபற்றி மிகவும் சந்தோஷமடைகிறேன். முதலில் செங்கோட்டை தாலுகா முழுவதும் தமிழ்நாட்டுடன் சேரப்போவதாகச் சொல்லப்பட்டது. இடையிலே புளியரை பகுதியைத்தவிர பாக்கி எல்லாம் தமிழ்நாட்டுடன் சேரும் என்ற அளவிலே சொல்லப்பட்டது. எல்லைக் கோட்டை எப்படி நிர்ணயிக்கவேண்டுமென்பதைப்பற்றி நமது அரசாங்கத்து அதிகாரிகளும், திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய அதிகாரிகளும் ஆலோசனை இப்பொழுது நடத்தும்பொழுது, திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய அதிகாரிகள் சில தவறுதலான கணக்குகளைக் காட்டி அச்சன்கோயில், அச்சம்புதூர் போன்ற பகுதிகளை திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் சேர்க்க வேண்டுமென்று கூறுவதாகத் தெரியவருகிறது. நமது மாகாண சர்க்கார் இதை விட்டுக்கொடுக்காமல் எல்லைக் கோட்டை நிர்ணயம் செய்து அச்சன் கோயில், அச்சம்புதூர் போன்ற பகுதிகளை தமிழ் நாட்டுடன் சேர்க்க சகல வழிகளையும் செய்ய வேண்டுமென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 11-23 a.m.

மேலும் கவர்னர் அவர்கள் உரையிலே பருவ மழை சுமாராக இருப்பதாக கூறினார்கள். இருந்தாலும் திருநெல்வேலியில் தாமிரபரணிப் பகுதி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. பாபநாசம் அணைக்கட்டில் தண்ணீர் குறைந்துகொண்டு வருகிறது. இதனால் வாய்க்காலில் தண்ணீர் திரக்காது இருக்கிறார்கள். ஆகவே பச்சைப் பசேல் என்று அழகாக இருந்த பயிர்கள் கருக ஆரம்பித்துவிட்டன. கருகுகின்ற பயிர்களை பார்க்கும்போது எங்கள் உடல்களெல்லாம் கருகுவதுபோன்று இருக்கின்றன. அந்த நிலையைப் பார்த்துக்கொண்டிருக்காமல், இருக்கிற தண்ணீரைத் திறந்துவிடும்படி அங்குள்ள அதிகாரிகளுக்குச் சர்க்கார் இங்கிருந்து உத்திரவு உடனடியாக அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருநெல்வேலியில் ஒரு பகுதியான கோவில்பட்டி, சங்கரன்கோவில் போன்ற இடங்கள் மிகவும் வாண்டிருக்கின்றன. நாங்குநேரி தாலுகா பல வருஷங்களாக பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. முன் சொன்னவைகளை நிவர்த்தி செய்வதற்கு ஒரு வழி இருக்கிறது. கடனா நதி என்ற நதியின் தண்ணீரை வீணாக மேற்கு நோக்கி அரபிக் கடலில் ஒரு பக்கத்தில் போய் விழுகிறது. தமிழ்ப் பிரதேசத்தில் அதில் ஒரு அணை கட்டினால் அதைக் கொண்டு அங்கு இருக்கப்பட்ட பல் பஞ்சப் பிரதேசங்களாக இருக்கப்பட்ட இடங்களெல்லாம் நஞ்சைப் பிரதேசமாகும் என் என்ஜினியர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். ஆகவே இதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து அங்கே உடனடியாக ஒரு அணை கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நியாயவார மசோதா இப்பொழுது ஆலோசனைக்கு வரப்போவதாக கவர்னர் அவர்களின் பேருரையிலே சொல்லப்பட்டது ஆனால் அது செப்டம்பர் மாத சட்டசபைக் கூட்டத்தில்தான் ஆலோசனைக்கு வருமென்று தெரியவருகிறது. எப்படியாவது இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராமல் இருக்கப்போவதில்லை, ஆனால் இதற்கிடையே அறுவடையானால் ஏதாவது தகராறுகள் வரலாம். ஆகவே முன்னாலேயே இந்த சட்டத்தை கொண்டு வருவது நல்லது. விவசாயிகள் மிகவும் கடன்பட்டு கஷ்டப்படுகிறார்கள். சாகுபடி செய்வதற்கு அவர்களிடம் போதுமான பணம் கிடையாது. சர்க்கார் அவர்களுக்கு தேவையான கடன் கொடுத்து உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்கு இப்பொழுது எங்கு பார்த்தாலும் நல்ல ஆதரவு கிடைத்துவருகிறது. திருநெல் வலி ஜில்லாவைப் பொறுத்தவரை அங்கு ஸ்தல அபிவிருத்தி திட்டத்திற்கு பணம் அதிகமாகச் செலவு செய்யப்படவில்லை. அங்கே

[Sri R. S. Arumugam] [11th August 1956

ஸ்தல அபிவிருத்தி திட்டம் நிறைவேறுவதற்கு எல்லா மக்களும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். இந்த வருஷமாவது அங்கு மக்கள் எவ்வளவு பணம் கேட்கின்றார்களோ அவ்வளவு பணத்தையும் கொடுத்துதவ நிச்சயமாக சர்க்கார் வழி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு என்ஜினியரிங் கல்லூரி அமைக்கப்பட வேண்டும்மென்று பல அங்கத்தினர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். அதையும் அங்கே ஏற்படுத்தவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எப்படியாவது வாடுகின்ற பயிர்களுக்கு பாபனாசம் அணைக்கட்டிலிருக்கும் தண்ணீரை நிச்சயமாக திறந்து விடவேண்டுமென்று மீண்டும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI P. VENKATESHA SHOLAGAR : சபையின் உப தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்திலே புயல் நிவாரணத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்று கூறியிருக்கிறார்கள். அப்படி விநியோகிக்கப்படும் பணம் புயலினால் சேதமாக்கப்பட்ட கோடிக்கணக்கான குடிசைகளை செப்பனிடுவதற்குப் போதுமானதாக இருக்கிறதா, புயலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அந்தப் பணம் கிடைத்திருக்கிறதா என்று பரிசீலனை செய்து பார்த்தால், புயலினால் பாதிக்கப்பட்ட பெரும்பகுதியான ஏழைகளுக்கு, பெரும் பகுதியான அழிந்த குடிசைகளை செப்பனிடுவதற்கு அந்தப் பணம் போய்ச் சேரவில்லை என்றுதான் தோன்றுகிறது. கொஞ்சம் பணம் வைத்திருப்பவர்களுக்குத்தான் இன்னும் அதிகமான பணம் போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சொத்து உள்ளவர்கள் வீடுகளும் பாதிக்கப்பட்டிருக்கிறது, சொத்தில்லாத ஏழைகள் வீடுகள்தான் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள வசதி செய்து தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சொத்து இருக்கிறதா இல்லையா என்று பார்த்து கொண்டு புயல் வீடுகளை சூரையாடுவதில்லை. சொத்து இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள வசதி செய்யவேண்டுமென்று சொன்னபொழுது, கனம் மந்திரி அவர்கள் நபர் ஜாமீன் மீது அவர்களுக்கு கடன் கொடுப்பதாகக் கூறினார். ஆனால், நடைமுறையிலே சொத்து இல்லாதவர்களுக்கு சொத்து இருப்பவர்கள்தான் ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. சொத்து இருப்பவர்கள் சொத்து இல்லாதவர்களுக்கு ஜாமீன் கொடுப்பதற்கு முன்வருவதில்லை. நபருக்கு நபர் ஜாமீன் கொடுப்பதாயிருந்தால்தான் சொத்தில்லாத ஏழைகளுக்கும் கடன் கிடைக்கும். சொத்தில்லாத ஏழை மக்கள்தான் அதிகமாக வீடுகளை இழந்து புயலினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குறைந்த பட்சமாக ரூ. 50-ஆவது ஜீவனோபாய கடனாகக் கொடுத்து உதவவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படியில்லாவிட்டால், புயலினால் அழிக்கப்பட்ட பல வீடுகள் செப்பனிடாமலே போய்விடும். சொத்து இல்லாத ஏழைகள் வீடிழந்தால் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டாமா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். நிலமில்லாத ஏழைகளுக்கு நிலங்களை பட்டா செய்துகொடுக்கவேண்டும். ஆனால் சர்க்கார் மேலும் யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். உண்டவன் வயிறே மேலும் நிரம்புகிறது என்றும், உண்ண வழியில்லாமல் படினியால் சாகிற வனுடைய குறைகள் எந்த அளவுக்குச் சொன்னாலும் தீர்க்கப்படவில்லை என்றும் ஒரு நிலைமை நிலவுகிறது என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வடவார் பிரதேசத்திலே போதிய அளவு தண்ணீர் கிடைக்காததனால் 20, 30 நாட்களில் பிடுங்கி நடவேண்டிய நாற்றுக்களெல்லாம் காய்ந்து போகின்றன. மேட்டூர் நீர் தேக்கத்தில் 110 அடி தண்ணீர் இருந்தும் இங்குள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு வழியில்லை. சபீபத்தில் எக்ஸிகியூடிவ் என்ஜினியர் இந்த இடத்தை நேரில் வந்து பார்த்தார்கள். அவரோடு நானும் எல்லா இடங்களையும் பார்வையிட்டேன். 1½ அடி தண்ணீர் வேண்டிய இடத்தில் ½ அடிகூட

11th August 1956] [Sri P. Venkatesha Sholagar]

தண்ணீர் இல்லை. இந்தக் கஷ்டத்தை உணர்ந்து எக்ஸிகியூடிவ் என்ஜினியர் அவர்கள் கூடுமான அளவுக்கு தண்ணீர் பாயும்படிச் செய்வதாக கூறினார்கள். ஆனால் அவருக்கு மனமிருந்தாலும்கூட, வேண்டிய அளவு தண்ணீர் விடுவதற்கு வழியில்லை. ஏனென்றால், அங்கு இருக்கக்கூடிய கால்வாய் அகலமில்லாமலும் ஆழமில்லாமலும் இருக்கிறது. 1,400 கன அடி தண்ணீர் வந்தால் தேவை பூர்த்தியாகும். ஆனால் கால்வாய் ஆழமில்லாததால் 1,140 கன அடி தண்ணீர்கூட விடுவதற்கு முடியவில்லை. ஆகவே, விவசாயிகள் தண்ணீரில்லாமல் நாற்றுக்களை நடுவதற்கு கஷ்டப்படுகிறார்கள். எனவே, வடவார் கால்வாயை ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

11-33 a.m.

* **Sri K. S. ARDHANARESWARA GOUNDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையிலே சேலம் ஜில்லாவில் மேட்டூரிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடுவது பற்றி அவர்கள் கூறியிருப்பதற்காக சேலம் மக்களின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டூர் வாய்க்காலிலிருந்து சென்ற ஆகஸ்ட்டு 1-ம் தேதியிலிருந்து தண்ணீர் விடப்பட்டு இருக்கிறது. அங்கு main canal-லிருந்து தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. அங்கே பாசனத்திற்கு வேண்டியபடி கிளை வாய்க்கால்கள் சரியான முறையில் இல்லாததாலும், மதகுகள் சரியான முறையில் இல்லாததாலும் தண்ணீர் இல்லாமல் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சர்க்கார் இந்த விஷயத்தில் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவிலிருந்து வரும் எல்லா அங்கத்தினர்களும் அங்கே கல்லூரி வேண்டுமென்று பல முறை வற்புறுத்தி வருகிறார்கள். கல்லூரி விஷயத்தில்கூட சர்க்கார் சேலம் ஜில்லாவைப் புறக்கணிப்பது குறித்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம். அங்கே கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று எப்பொழுது கோரினாலும், சர்க்கார் பணம் இல்லை என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால், குறிப்பாக ரெயில்வே ரிஸர்வ் நிதியில் நிறையப் பணம் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அந்தத் தொகையை எடுத்துச் செலவு செய்யவேண்டும் என்று சொன்னால் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் அந்தத் தொகையை எடுத்துச் செலவுசெய்வதற்காக கூடிய சீக்கிரத்தில் சட்டத்தை மாற்றியமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுப்பார்களா என்று நினைக்கிறேன்.

மேலும், அங்குள்ள கூட்டு உரவு மொத்த விற்பனை சங்கத்தில் ரிஸர்வ் நிதி இருக்கிறது. அதை எடுத்துச் செலவு செய்வதற்கும் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று சொல்லி திட்டங்களை நிறைவேற்றுவதை காலதாமதம் செய்யக்கூடாது. இந்த ஆண்டிலாவது இந்தத் தொகையை எடுத்துச் செலவுபிப்பதற்கு சர்க்கார் வேண்டியபடி சட்டத்தை திருத்தி அமைத்து ஏற்பாடுகள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அடுத்தபடியாக, பொறுக்கு விதைப் பண்ணைகளை அமைப்பதற்கு சர்க்கார் தகுந்த நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று கவர்னர் அவர்களுடைய உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது புதிதாக வந்துள்ள மேட்டூர் கால்வாய் திட்டத்தில் ஜனங்கள் விதைக்கு ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் ஒரு விதைப் பண்ணையை உடனடியாக ஏற்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் விஷயத்தில், ஜனங்கள் இப்போதுதான் மிகுந்த உற்சாகத்தோடு முன்வந்து வேலைகளைச்

[Sri K. S. Ardhanareswara Gounder] [11th August 1956

செய்வதற்குத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் இன்னும் இந்த வருஷத்தில் அந்தத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் பணம் கொடுக்கவில்லை, அதனால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது இந்தத் திட்டங்களுக்காக ரூ. 150 லட்சம் இந்த ஆண்டிற்கு ஒதுக்கியிருப்பதாக கவர்னர் அவர்களுடைய உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது மக்களுக்கு இருக்கும் உற்சாகத்தைப் பார்க்கும்போது ரூ. 3 கோடி ஒதுக்கினால்கூட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மக்கள் தயாராயிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆகையினால் நமது சர்க்கார் மத்திய சர்க்காருடன் போராடி உடனடியாக ரூ. 3 கோடியை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால் இப்போது மக்களுக்கு இருக்கும் உற்சாகம் மேன்மேலும் அதிகரித்து ராஜ்யம் முன்னேற்றம் அடையும். என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேட்டூரில் தொழிலாளர்கள் வீடே இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வீடு கட்டுவதற்கு சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டிலாவது மேட்டூர் பிராந்தியத்தை தேசிய விஸ்தரிப்பு பிளாக்குகளில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேட்டூர் வாய்க்கால் பாசனமுள்ள இடங்களில் இப்போதுள்ள தேசிய விஸ்தரிப்பு பிளாக்குகளை விஸ்தரித்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

* **Sri M. MARIMUTHU** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் நிகழத்திய உரையைப் பாராட்டி சில விஷயங்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நமது காருண்ய சர்க்கார் வேண்டிய வசதிகளைச் செய்தது. அந்த மக்களுக்குக் கடன்களாகக்கொடுப்பதற்கு நிர்ணயித்த தொகைகளில், பாதி மக்களுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது, இன்னும் பாதி மக்களுக்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. படுக்கோட்டை, ஒரத்த நாடு இரண்டு தாலூக்காக்களிலும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரையிலும் கடனாக கொடுத்த தொகையானது, ஒவ்வொருவர்க்கும் 250 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் கொடுக்கப்பட்டது.

இனிமேல் ஒவ்வொருவர்க்கும் ரூ. 50-லிருந்து 200 ரூபாய் வரையில் கொடுக்கப்படுவதாகயிருக்கிறது. புயலால் பாதிக்கப்பட்ட ஏழை ஹரிஜனங்களும், விவசாயிகளும் இந்த நிமிஷம் வரையிலும் மிகவும் கஷ்டப்பட்டிருப்பதை நான் இங்கு சொல்லாமலிருக்க முடியவில்லை. ஆகவே, புயல் நிவாரணக் கடன்களைக் கொடுக்கும்போது, உதவி பெற தகுந்தவர்களுக்கே கடன் கொடுத்து உதவுமாறு சர்க்காரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, வானம் சுருங்கினால் தானம் சுருங்கும் என்ற பழமொழிபோல் தஞ்சாவூர் ஜில்லாவில் மழையில்லாத காரணத்தால், இது நிமிஷம் வரையிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில், குறுவை, சாணபோகம், நாற்றுவிடாமலும் தரிசு உழவு உழுகாமலும் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், சர்க்கார் இந்த விஷயத்தை கவனித்து இது சம்மந்தமாக, விவசாயிகளுக்கு உதவிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு விஷயத்தை என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை. அது என்னவென்றால், கள்ளச் சாராயம் காச்சுவதைப்பற்றியது. நமது சர்க்கார் தங்களுக்கு வரக்கூடிய கோடிக்கணக்கான ரூபாய், வருமானத்தை தவிர்த்து, கள் என்ற அரக்கனை ஒழிப்பதற்காக மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆனால், சர்க்காருடைய நோக்கத்திற்கு விரோதமாக இப்போது வீட்டுக்கு வீடு, கள்ளச் சாராயம் காச்சுவது ரொம்பவும் விமரிசையாக நடந்துவருகிறது. நான் இளைஞனாக இருந்த காலத்தில்,

வேப்பம் பட்டை வேலன் பட்டை வேற்றிருக்கும் சாராயம்,
காத்திருந்து பூஜை பண்ணும் காவேரிப் பண்டாரம்.

11th August 1956] [Sri M. Marimuthu]

என்று இளைஞர்களும் பாடிக் கொண்டிருந்தபோது மரப் பட்டைகளைக் கொண்டு சாராயம் காச்சுவதாக சொல்லக் கேள்விப்பட்டேன். இன்றைக்கும் சாராயம் காச்சுவதற்காக மரப் பட்டைகளை வெட்டி மரங்களை நாசம் செய்கிறார்கள். இது தவிர இப்போது ஸ்டோட் அம்மோனியம், வெல்லம். சர்க்கரை இவைகளைக்கொண்டு, சாராயம் காச்சுவது மிக அதிகமாக நடந்து வருகிறது. இதைத் தடுப்பதற்கு நமது சர்க்கார் இன்னும் வெகு வேகமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் எங்கு பார்த்தாலும், அடி, உதை, குத்து, வெட்டு, கொலை, எல்லாம் மிக அதிகமாக ஏற்படும் என்று திண்ணமாகக் கூறுவேன். போலீஸ்காரர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மாத முதல் மூன்று மாதங்கள் வரையில் ரிசாவ் போலீஸுடன் தங்கி அங்குள்ள தோட்டம், துறவு, வீடு வாசல், சந்து பொந்து எல்லாயிடங்களிலும், ஊறல் செய்து சாராயம் காச்சுபவர்களைப் பிடிக்கவேண்டும். அவர்களுக்கு சரியான தண்டனை கொடுத்து ராஜ்யத்தில் கள்ளச் சாராயம் காச்சுவதைத் தடுக்கவேண்டும்.

ஆகையால் ஊறல் வைத்து காச்சுபவர்களுக்கு 10 வருஷமும் விற்பனை செய்பவர்களுக்கு 10 வருஷமும், குடிப்பவர்களுக்கு 5 வருஷமும் தண்டிக்கவேணுமேயொழிய அபராதங்கள் போடுவதை வியாபார்கள் கட்டிவிட்டு மறுமுறையும் அதே வேலைகள் ஆரம்பிக்கிறார்கள் என்பதை சர்க்கார்க்கு நான் அன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

VI,—PRESENTATION OF PETITION TO THE ASSEMBLY.

11·43 a.m.

* SRI S. C. C. ANTHONY PILLAI: Mr. Deputy Speaker, I rise to present a memorandum on behalf of the Madras Government Hospital Workers' Union. This Union proposed to stage a strike about five months ago, but because of the pressure of public opinion and their desire not to create a crisis in the State, they did not actually stage the strike.

V.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

SRI S. KANDASAMI GOUNDER: சார், ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர், நான் மூன்று நாட்களாக பேசவேண்டும் என்று கேட்டு வருகிறேன், எழுதியும் கொடுத்திருக்கிறேன். என்னை இன்னும் கூப்பிடவில்லை.

DEPUTY SPEAKER: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

* SRI S. C. C. ANTHONY PILLAI: The workers withdrew their strike notice on the assurance given by the Hon. Minister concerned that their grievances would receive sympathetic consideration at the hands of the Government. Five months have elapsed and yet what proposal is being considered by the Government has not emanated from this august body. On the other hand, far from doing elementary justice to the poor workers, a positive injustice is being sought to be done. A directive seems to have been issued that on and from 1st August—that is, from this month—the house-rent allowance will be cancelled. Right up to 31st July 1956, these workers used to pay a nominal sum as rent for the quarters that they were occupying. In view of the nature of their employment, they have to attend the hospital at infrequent and odd hours. Naturally, they have to live as near the hospital as possible. When the workers employed in the hospitals have asked for some bread, instead of assuring them of the same, the Government have done a positive injustice to them. On behalf of these poor workers, I am presenting this

